DEPOSITION OF WITNESS

(CHAPTER XXV BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SENDAMANGALAM

C.C.No.1/2026

PW - 1

| | | |
|---|---|---|
| Name | : | பவளக்கொடி (Lw – 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

Sworn by Bench Clerk J. Sham

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை Date : 20.08.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் அனைத்து மகளீர் காவல்நிலையத்தில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2024ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரை நாமக்கல் மதுவிலக்கு அமல் பிரிவில் பெண் தலைமை காவலராக பணிபுரிந்தேன்.

கடந்த 21.12.2025ம் தேதி காலை 09.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் அவர்களின் அறிவுரையின் பேரில் நானும் தலைமை காவலர் திரு.சிவராஜ் மற்றும் தலைமை காவலர் திரு.ரமேஷ் ஆகியோருடன் சேந்தமங்கலம் சரகத்திற்கு உட்பட்ட காரவள்ளி நடுக்கோம்பை முத்துக்காப்பட்டி ஆகிய பகுதிகளில் குற்ற தடுப்பு நடவடிக்கையாக ரோந்து பணியில் இருந்தோம். அன்றைய தினம் 13.30 மணியளவில் மேதர்மாதேவியில் இருந்து சிவியாம்பாளையம் செல்லும் சாலையில் புருசோத்தம்மன்காடு அருகே கண்காணித்தபோது சுமார் 50 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி சந்தேகப்படும்

வகையில் கையில் பிராந்திபாட்டில் உடன் நின்று கொண்டிருந்தார். அவரை சுற்றி சில நபர்கள் இருந்தார்கள். சுற்றி இருந்த நபர்கள் எங்களை பார்த்ததும் ஓடிவிட்டார்கள். அவர்தான் ஆஜர் எதிரி. **(சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.)**

எதிரியை நாங்கள் பிடித்து விசாரித்தபோது அவர் தன்னுடைய பெயர் அய்யம்மாள் க.பெ.குணசேகர் என்றும் தான் சட்டத்திற்கு புறம்பாக அரசு மதுபானத்தை விற்பனைக்கு வைத்துள்ளதாக கூறினார். ஆஜர் எதிரி தன் வைத்திருந்த சாக்கு பையை ஆய்வு செய்தபோது அதில் தலா 180 ML அளவுள்ள மதுபானம் Black pearl Brandy – 28 பாட்டில்களில் மதுபானம் இருந்தது. எதிரி அவற்றை விற்பனைக்காக வைத்திருப்பதாக கூறினார்.

பின்னர் அங்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லாததால் காவல் சாட்சிகளான தலைமை காவலர் திரு.சிவராஜ் மற்றும் என் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து ஆஜர் செய்த மேற்படி 180 ML அளவுள்ள மதுபானம் Black pearl Brandy – 28 பாட்டில்களை தலைமை காவலர் திரு.ரமேஷ் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பறினார். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் தலைமை காவலர் திரு.ரமேஷ் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து தனியறிக்கையை நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் என்பவரிடன் தாக்கல் செய்தார். மேற்படி தனியறிக்கையின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் எதிரி மீது நிலைய குற்ற எண்.303/2025 சட்டபிரிவுகள் 4(1)(C) of TNP Act–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கை தனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் எதிரியை காரணம் கூறி கைது செய்தார். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் எதிரியை விசாரிக்க எதிரி எவ்வித அச்சுறுத்தலோ, தூண்டுதலோ, ஆசை

வார்த்தையோ இன்றி தானாக முந்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை தலைமை காவலர் திரு.சிவராஜ் மற்றும் என் முன்னிலையில் மாலை 16.00 மணிக்கு பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை தக்க பிணையில் விடுவித்தார்.

பின்னர் அன்றைய தினமே மாலை 17.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் அவர்களுடன் நானும் தலைமை காவலர் திரு.சிவராஜ் சம்பவ இடம் சென்றோம். அங்கு பொதுஜன சாட்சிகள் யாரும் முன்வராதததால் தலைமை காவலர் திரு,சிவராஜ் மற்றும் என் முன்னிலையில் காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் திரு.மதன்குமார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பொதுஜனம் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் பொதுஜனங்களை யாரையும் எதிரி அரசு மதுபானங்களை உரிமம் இன்றி விற்பனை செய்கிறாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் சரிதான். எதிரி அரசு மதுபான கடைகளில் மது வாங்கியதாக சொல்லியுள்ள நிலையில் அந்த மதுபான கடையில் எதிரிதான் மதுபானத்தை வாங்கினார் என்பதை உறுதி படுத்தும் வகையில் ரசீதுகள் எதையும் கைப்பற்றவோ அல்லது அரசு மதுபான கடை ஊழியர்கள் யாரையும் விசாரிக்கவோ இல்லை என்றால் சரிதான். மேற்படி மதுபான பாட்டில்களை எதிரி சாக்கு பையில் வைத்திருந்ததாக சொல்லப்படும் நிலையில் மேற்படி நைலான் பையை கைப்பற்றி காவல் ஆய்வாளர் நீதிமன்றத்தில் ஒப்படைத்தாரா என்றால்

இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறும்போது அது அவருக்கு எதிராக பயன்படுத்தப்படகூடும் என்ற சங்கதியை காவல் ஆய்வாளர் எதிரியிடம் கூறி ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரியிடம் இருந்து மற்ற நபர்கள் மதுபானங்களை வாங்கி கொண்டு சென்றார்களா என்பது பற்றி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் என் முன்னிலையில் திறந்து பார்க்கப்படவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பாட்டில்களை என் முன்னிலையில் உதவி ஆய்வாளர் யாரிடமும் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சொத்துக்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் ஏற்கனவே பிற வழக்குகளில் கைப்பற்றப்பட்டு காவல்நிலையத்தில் வைத்திருந்த மது பாட்டில்களை எதிரியிடம் இருந்து கைப்பற்றியதாக கூறி எதிரியின் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**